திரு. வே. தங்கப்பாண்டியன் : 'பி.ஈ.' படித்திருக்கிறார்கள் என்பது One of the reasons ஆக இருக்க முடியும். பட்ட தாரிகளைப் பொறுத்த வரையில், அவர்கள் நீண்ட காலமாகத் தொடர்ந்த அனுபவம் உள்ளவர்கள். எனவே அவர்களின் அனுபவத்தைக் கணக்கில் கொண்டு அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அவர்களின் அனுபவத்தின் அடிப் படையில்தான் பட்ட தாரிகளுக்கு 3:1 என்ற விகிதத்தில் பதவி உயர்வுகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இந்த 230-க்கு மேற்பட்டவர்கள் தங்கள் பணிகளில் நிரந்தரப் படுத்தப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தற்போது 116 நிரந்தரப் பதவி இடங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று அரசு பரிசீலித்து வருகிறது. 56 தற்காலிகப் பதவி இடங்களை நிரந்தரப் பதவி இடங்களாக ஆக்கும் செயற் குறிப்பு அரசாங்கத்தின் ஆய்வில் இருப்பதோடு 172 கூடுதல் பணி இடங்களை ஏற்படுத்த ஏற்பாடு செய்து வருகிறது.

Over-bridge across Railway line.

* 169 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether any proposal has been received from Thanjavur Municipality regarding reconstruction of the over-bridge across the Railway Line on the Medical College Road; and

(b) if so, the action proposed to be taken thereon ?

இரயில் பாதையின் மேல் மேம்பாலம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மருத்துவக் கல்லூரிச் சாலையில், இரயில் பாதையின் குறுக்கே உள்ள மேம்பாலத்தைச் சீரமைப்பது தொடர்பாக தஞ்சாவூர், நகராட்சியிட மிருந்து செயற்குறிப்பு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அது குறித்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

1978 மார்ச் 2]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(இ) இது குறித்து தென் பிராந்திய ரயில்வேயுடன் கடிதத் தொடர்பு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-40)

திரு. ஜி. சுவாமிநாதன் : இது குறித்து கடிதம் எழுதியிருப்பதாகச் சொல்கின்றார்கள். தென் பிராந்திய ரெயில்வேய்க்கு எழுதிய கடித விவரம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ரெயில்வே லெவல் கிராஸிங்குகளால் போக்குவரத்துத் தடைகள் ஏற்படுகின்றன. அந்தச் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள ரெயில்வேயுடன் ஆலோசனை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. தஞ்சாவூர் நகராட்சியும் சேர்த்து செலவை ஏற்றுக்கொள்வது குறித்து செயற்குறிப்பு உள்ளது. ரெயில்வே 50 சதவிகிதமும், மாநகராட்சியும் அரசும் 50 சதமும் ஏற்றுக்கொள்வது குறித்து தென் பிராந்திய ரெயில்வேயுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : முதல் தடவை பாலம் போடுகிற போது மட்டும் தான் ரெயில்வே கொடுக்கிறதா, இரண்டாவது தடவை பழுதடைந்து இடிபாடுகள் ஏற்படும்போதும் ரெயில்வே கொடுக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பாலம் மிகவும் பழுதடைந்துவிட்டால், மீண்டும் புதுப்பிக்க மத்திய அரசு உதவி கொடுக்கிறது. மாநில அரசு பாலத்தை விரிவுபடுத்தும்போது, ரெயில்வேயிடம் பங்கு பெறும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அந்தப் பாலம் பழுதடைந்திருக்கிறதா, விரிவுபடுத்தப்பட இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பழுது அடைந்ததாகக் கருத்து சொல்லப்பட்டுள்ளது. எனவே ரெயில்வே நிதி தரவேண்டும் என்று மாநில அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம்: நம் மாநிலத்தில் ரெயில்வே கிராசிங் வருகின்ற இடங்களிலே அந்தந்த மாநகராட்சிகளே நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமையை மாற்றி மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு எல்லா நகரங்களிலும் உள்ள ரெயில்வே கிராசிங்குகளிலும் உள்ள மேம்பாலங்கள் அல்லது அண்டர் கிரவுண்ட் வழிகள் போன்றவைகளைச் சீரமைக்க செயற்குறிப்பு ஏதாவது உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மத்திய அரசு மற்றும் ரெயில்வே துறையோடு மாநகராட்சிகள் நேரடியாகத் தொடர்பு கொள்வதில்லை. மாநில அரசுதான் நேரடியாகத் தொடர்பு கொள்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: இப்போது பஸ்களும், ஊர்திகளும் போய்க் கொண்டிருக்கின்றன. ரெயில்வேயின் அனுமதி இல்லாமல் ரெயில்வே கிராசிங்கில் உள்ள பாலத்தை விரிவுபடுத்த முடியாது என்று சொல்கிறார்கள். அதை அறிந்து இந்த அரசும் மாநகராட்சித் துறையும் பாலத்தை விரைவாகக் கட்ட ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இந்தப் பாலம் 18 டன் பளு தாங்க வேண்டியது. இப்போது தாங்கக்கூடிய நிலையில் இல்லை. மத்திய அரசு 50 சதம் கொடுக்க வேண்டும் என்று மாநில அரசு குறிப்பினை அனுப்பியுள்ளது. அதை விரிவுபடுத்த மாநில அரசும் தொகை ஏற்கவேண்டிய நிலையில் இருப்பதால், இதைப்பற்றி அரசு ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Lalgudi Sivagnanam Co-operative Farmers' Marketing Society.

* 165 *Q.*—THIRU V. THANGAPANDIAN (on behalf of Thiru T. V. MUTHUKRISHNAN): Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any irregularity in regard to the distribution of fertilizers in Lalgudi Sivagnanam Co-operative Farmers' Marketing Society, Tiruchirappalli district, has come to the notice of the Government;

(*b*) if so, whether any action was taken thereon; and

(*c*) the details thereof?

லால்குடி சிவஞானம் கூட்டுறவு விவசாய விற்பனை சங்கம்

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. தி. வி. முத்துகிருஷ்ணன் சார்பில்): மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி மாவட்டம், லால்குடி சிவஞானம் கூட்டுறவு விவசாய விற்பனை சங்கத்தில், உர விநியோகத்தில் முறைகேடு நடந்தது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்பேரில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?